**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>M.C.O.P.No.61/2023</u>**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சத்தியா |
| தகப்பனார் / கணவர் | .. | ராஜா |
| வயது | .. | 25 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | வீரம்பாக்கம் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, பார்த்தேன். விபத்து எங்கு நடந்தது என்றால் குளமந்தை இருந்து வீரம்பாக்கம் செல்லும் சாலையில் விபத்து நடந்தது. விபத்தில் இறந்த ஜனனி என் குழந்தை என்றால் சரிதான். குழந்தையுடன் நானும், என் மாமியார் மற்றும் என் கணவர் சென்றோம். நாங்கள் மூவரும் கடைக்கு செல்ல சாலையை கடந்துவிட்டோம், குழந்தை எங்கள் பின்னால் சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது. விபத்து சம்பந்தமாக என் மாமனார் சின்னபையன் புகார் கொடுத்தார். அவர் அந்த புகாரில் என் கணவர் சாலையை கடக்கும் போது அதற்கு பின்னால் வந்த குழந்தை சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி குழந்தையின் கையை பிடித்து சாலையை கடக்காமல் விட்டுவிட்டு சென்றால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், அதனால் இந்த விபத்திற்கு காரணம் என் கணவர் தான் என்றாலும் சரியல்ல. மேலும் மேற்படி விபத்திற்கு குழந்தையின் அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல.

மேற்படி விபத்தை ஏற்படுத்திய மோட்டார் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் மோட்டார் வாகன புதிய திருத்த சட்டத்தின்படி 2ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றும், அதனால் இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**